

நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் அமைந்துள்ள உலக பிரசித்தி பெற்ற நாகூர் தர்காவின் 469வது கந்தூரி திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அமைச்சர்கள் ஆவடி சா.மு.நாசர் , அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் ஆய்வு செய்தார்கள். உடன், மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ், வை.செல்வராஜ்எம்.பி, தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர், என்.கௌதமன், ஜெ.முகம்மது ஷாநவாஸ்எம்.எல்.ஏ, மாவட்ட எஸ்பி சு.செல்வகுமார், நகரமன்ற தலைவர் இரா.மாரிமுத்து, தர்கா தலைமை நிருவாக அறங்காவலர் சையது முகமது காஜி ஹுசைன் சாஹிப், நாகூர் தர்கா ஆலோசனைக் குழு தலைவர் சையது முகமது கலீபா சாஹிப் ஆகியோர் உள்ளனர்.

## மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகள் செப்பனிடப்படும்!

# காட்பாடி - திருப்பதி புறவழிச் சாலையை இணைக்க ரூ.100 கோடியில் புதிய சுற்றுச்சாலை!

## பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

வேலூர், நவ.9-

வேலூர் மாவட்டம், அனைக்கட்டு அருகே கெங்கநல்லூரில் அப்துல்லாபுரம் முதல் ஆசனாம்பட்டு வரையிலும் அதே போல் ஆலங்காயம் முதல் திருப்பத்தூர் வரையில் இருவழி சாலையை 4 வழியாக சாலைகளாக தலா 8 கிலோ மீட்டர் ரூ.50 கோடி செலவில் விரிவாக்கம் செய்யும் பணியை பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு பணிகளை துவங்கி வைத்தார்.

இதில் மாவட்ட பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.,குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு, நாடாளுமன்ற உறுப்பினர் மாவட்ட பொறுப்பாளர்,

டி.எம்கதிர் ஆனந்த்எம்.பி.,மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் திரளானோர் இதில் கலந்துகொண்டனர்

பின்னர் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் கூறுகையில், தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப் பேற்ற பின்னர் திராவிட மாடல் ஆட்சி என பெயரிட்டார் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பது இலக்கு தமிழ்நாட்டின் விவசாய பெருங்குடி மக்கள் பொருட்களை சந்தைப்படுத்த சாலை அவசியம். அரசின் மூலதனம் நெடுஞ்சாலைத்துறை அதற்கு முக்கியத்துவம் தந்து பல பணிகள் நடக்கிறது .

அந்த வகையில் வேலூர் மாவட்டத்தில் 4 ஆண்டுகளில் 276 கிலோ மீட்டர் சாலையை விரிவுப்படுத்துவது உறுதிப்படுத்தும் அடிப்படையில் ரூ.475 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது இந்த நிதியாண்டில் சாலையை விரிவுப்படுத்த ரூ.130 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இருக்கும் சாலையை பராமரிப்பு விரிவுப்படுத்த இம்மாவட்டத்தில் 600 கோடி செலவு செய்துள்ளோம். தமிழகத்தில் தரைப்பாலங்கள் 1281 அதனை உயர் மட்ட பாலமாக உயர்த்தும் திட்டத்தில் வேலூர் மாவட்டத்தில் 12 மேம்பாலங்கள் அமைக்க செலவும் செய்யப்பட்டுள்ளது. நீண்ட நாள் கோரிக்கையான பொன்னை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்பட்டது காங்கேயநல்லூரிலும் பாலம் கட்டிகொண்டிருக்கிறோம். விரைவில் திறக்கவுள்ளோம் இம்மாவட்டத்தில் ரயில்வே மேம்பாலம் 200 கோடி திட்டத்தில் ஐந்து மேம்பாலங்கள் அதில் மூன்று முடிந்து 2 ரயில்வே மேம்பால பணிகள் நடக்கிறது. முதல்வர் அறிவித்த திட்டத்தின் படி இருவழி சாலைகளை 4 வழி சாலைகளாக ஆக்குகிறோம் . வேலூர் மாவட்டத்தில் ஏற்கனவே 48 கோடியில் சாலை விரிவாக்கம் செய்துள்ளோம் இன்று அப்துல்லாபுரம் ஆசனாம்பட்டு வரையில் 50 கோடியில் 4 வழி சாலையாக விரி வாக்கபடும். வேலூரில் புறவழி சாலை வேண்டுமென சட்டமன்றத்தில் பேசினார்கள் .

அதற்கு முக்கியத்துவம் தந்து மங்களூர் விழுப்புரம் சாலையை லத்தேரியில் இணைப்பு சாலை போடப்படும் தென் பகுதியிலிருந்து திருப்பதி செல்லும் ஆன்மிக பக்தர்களுக்காக அவர்கள் வேலூர் தாண்டி செல்லும் போது காட்பாடி வழியாக செல்ல வேண்டும் அதற்கு புறவழிச் சாலை அமைக்க கோரிக்கை வைத்தனர். அதற்காக காட்பாடி சித்தூர் சாலையிலிருந்து ராணிப்பேட்டை கிருஷ்ணகிரி சாலையை சுற்றுசாலையாக இணைக்க 7 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.100 கோடி ஒதுக்கியுள்ளோம் சாலை என்பதும் நாட்டின் முதுகெலும்பு பொருளாதார முதுகெலும்பு என்பதால் நெடுஞ்சாலைத் துறைக்கு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் பணிகள் சிறப்பாக நடக்கிறது சாலையை விர்வாக்கம் செய்யும் போது ஒரு மரத்தை வெட்டினால் 10 மரங்களை வைக்கிறோம் சென்ற ஆண்டு 5 லட்சம் மரக்கன்றுகளை நட்டோம் இந்த ஆண்டும் முதல்வர் ஆணையை ஏற்று மரங்களை நடுவோம். நெடுஞ்

சாலைத்துறை மரங்களை நடவும் முக்கியத்துவம் தருகிறோம் பள்ளிகொண்டா புறவழி சாலை ரூ.10.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

அந்த சாலையும் போடப்படும் மத்திய அரசு ஏற்கனவே அடிக்காத 2 புயல் அடித்தது பல ஆயிரம் கோடி கேட்டோம் கடிதம் எழுதினோம் வலியுறுத்தினோம் அவர்கள் கொடுக்கவில்லை வருங்காலங்களில் புயல் வந்து சாலைகள் பழுதானால் மத்திய அரசிடம் கேட்போம் ஆனாலும் மாநில நிதியை வைத்து சாலைகளை செப்பனிடுவோம் மழை முடிந்தவுடன் முதல்வர் பணம் ஒதுக்குவார் நாங்கள் சாலையை போடுவோம். ஏற்கனவே சென்ற ஆட்சியில் 70 ரயில்வே மேம்பாலங்களை அறிவித்தனர் ஆனால் அவர்கள் அதற்காக சர்வீஸ் சாலைக்கு கூட நிலம் எடுக்கவில்லை .இப்போது திமுக ஆட்சியில் 36 ரயில்வே மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டது மீதமுள்ளவைகளை கட்டிகொண்டிருக்கிறோம்.

சாலை பராமரிப்பு வருடா வருடம் நடந்து வருகிறது அதற்கு நிதி ஒதுக்கப்படும் .

வெளிப்படை தன்மையுடன் டெண்டர் விடுகிறோம் அதற்கு தனி அதிகாரியை போட்டு செலவு முறையாக நடக்கிறதா என்று ஆய்வு செய்கிறோம்.

பணிகள் முறையாக நடக்கிறது புதிய சுங்கச்சாவடி துவங்குவது குறித்து ஒன்றிய அரசு தான் சொல்ல வேண்டும் .

அது கூடாது என நான் பலமுறை கடிதம் எழுதி விட்டேன் ஒன்றிய அரசு கண்டுகொள்ள வில்லை என கூறினார் .

---

### ஜெ.கருணாநிதி – கே ஏழுமலை – ரத்னா லோகேஸ்வரன் – பா.கார்த்திகா பாஸ்கர் பங்கேற்பு:

# தியாகராயர் நகர் மேற்கு 32 'அ' வட்ட பி.எல்.ஏ.2 - பி.டி.ஏ.- பி.எல்.சி. கூட்டம்!

## வட்டக் கழக செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா அறிக்கை!

சென்னை, நவ. 9 -

தியாகராயர்நகர் மேற்குப் பகுதி 132 அ வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென் மேற்கு மாவட்ட தியாகராய நகர் மேற்கு பகுதி 132 'அ' வட்ட கழக BLA2 BDA, BLC மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் என்12/29. சக்கரபாணிதெரு விரிவு மேற்கு மாம்பலம் சென்னை 33ல் உள்ள மாமன்ற உறுப்பினர் அலுவலக அருகில் இன்று 9-11-2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில் அவைத் தலைவர்.சுப. எம்.முருகன் தலைமையில் மாவட்டச் செயலாளர் மயிலை.த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி சட்டமன்ற உறுப்பினர், ஜெ.கருணாநிதி, மேற்கு பகுதிகழக செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., தொகுதி பார்வையாளர் திருமதி.ரத்னா லோகேஸ்வரன்.எம்.சி, திருமதி. பா.கார்த்தகா பாஸ்கர் எம்.சி. கே.எஸ்.வெல்டிங்ராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் சிறப்பாக பணியாற்றுவது மற்றும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக BLA2, BDA, BLC மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

ஆகவே ஆலோசனை கூட்டத்திற்கு வட்டத்திற்குட்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மகளிர் அணி சுற்றுச்சூழல் அணி ,மகளிர் தொண்டர் அணி, வழக்கறிஞர் அணி, ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, மாணவர் அணி, வர்த்தக அணி, தொண்டர் அணி, சிறுபான்மை ராணி, பொறியாளர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, தொழிலாளர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள்,பாக முகவர்களின் அணி, தொ.மு.சா தொழிலாளர் தொழில் சங்கம் கழகத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.





வேளச்சேரி மேற்குப் பகுதி 177வது வார்டில் இந்திரா நகர், பாலாஜி தெருவில் உயர் அடர்த்தி பாலிஎதிலீன் குழாய் வடிகால் (எச்டிபிஇ பைப் டிரெயின்) அமைக்கும் பணியினை கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பெ.மணிமாறன் எம்.சி. ஆய்வு செய்தார். உடன் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர், கழிவுநீர் குடிநீர் வாரிய உதவி செயற்பொறியாளர், ஆய்வாளர்கள், பணியாளர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

---

# S.I.R. எனும் சனாதன வடிவம்!

வழக்கறிஞர்
**ப.மதிவாணன்**
செய்தித் தொடர்பாளர் –
ஊடகவியலாளர்



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பூதத்தை தமிழ்நாட்டை நோக்கி அவிழ்த்து விடத் துணிந்திருக்கிறது பாசிச பாஜக. தங்களுக்கு சாதகமாக வாக்களிக்க வாய்ப்பில்லாதவர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குவது என்பதைத் தாண்டி, மக்களின் வாக்குரிமையைப் பறித்து விடுவதென்ற பாஜகவின் சனாதன முகம் அதற்குள் ஒளிந்திருக்கிறது. ஆனால் இதைப் பற்றியெல்லாம் பேசத் திராணியில்லாத பரம்பரை அடிமைகள் நேரடியாகவும், புதிதாக அடிமையானவர்கள் மறைமுகமாகவும் பாஜகவின் நாசக்கார வேலைக்கு துணைப் போகத் தொடங்கியிருக்கிறார்கள்.

இது சாதாரணமான வாக்காளர் பட்டியல் திருத்தம்தான்; இதனால் தேர்தல் நியாயமாக நடைபெறும் என மோடியே கேட்டால் சிரிக்கும் வகையில் பேசி வருகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1ம் தேதியை அடிப்படையாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தப்படும். அதே போல ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கப்படும். அதைத்தான் பாஜகவின் நாசகார திட்டமான சிறப்பு தீவிர திருத்தத்தோடு ஒப்பிட்டு பாஜகவைக் காப்பாற்ற முயன்று கொண்டிருக்கிறார்கள் முதுகெலும்பில்லாதவர்கள்.

### S.I.R.ஐ ஏன் எதிர்க்கிறோம்

ஒரு திட்டம் முன்னெடுக்கப்படும் போது, அதன் பலன்கள், விளைவுகள் எப்படி இருக்கும் என கடந்த காலத்தில் அந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட திலிருந்து அறிந்து கொள்ளலாம். உதாரணத்திற்கு நம்முடைய முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைப் பின்பற்றி பல மாநிலங்கள் அதனை நடைமுறைப்படுத்தி வருகின்றன. அதன் வெற்றி கண்கூடாகத் தெரிந்ததால் தான் பின்பற்றப்படுகிறது. வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்தை கடுமையாக எதிர்க்க வேண்டும் என்பதற்கான அனுபவங்களை பீகார் தந்திருக்கிறது.

தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு திடீரென வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை அறிவித்த தேர்தல் ஆணையம் 65 லட்சம் வாக்காளர்களை பட்டியலில் இருந்து நீக்கியது. 22 லட்சம் பேர் மரணித்ததாகவும், 7 லட்சம் பேர் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பதிவு செய்திருப்பதாகவும், 36 லட்சம் பேர் நிரந்தரமாக பீகாரை விட்டு வேறு இடங்களுக்கு சென்று விட்டதாகவும் கூறியது. சரி நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் விவரங்களை வெளியிடுங்கள் என்று கேட்ட போது அதனை மறுத்தது தேர்தல் ஆணையம். உச்சநீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு வெளியிடப்பட்ட விவரங்களில் தேர்தல் ஆணையத்தின் தில்லுமுல்லுகள் சந்தி சிரித்தன. இறந்ததாக சொல்லப்பட்டவர்கள் சிலரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார் சமூக செயற்பாட்டாளர் யோகேந்திர யாதவ். அது ஒரு பிரச்னை யில்லை என சப்பைக் கட்டு கட்டியது தேர்தல் ஆணையம்.

தேர்தல் ஆணையம் இப்போது நடத்தவிருக்கும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் பச்சை அயோக்கியத்தனம் எது தெரியுமா? இதுவரை இங்கு நடந்த சிறப்பு திருத்தம் எல்லாம் வாக்காளர்களை சேர்ப்பதற்கானது. மக்களுக்கு வாக்குரிமை அளிப்பதற்கானது; ஆனால் வாக்காளர்களை நீக்குவதற்காகவே ஒரு திட்டத்தை முன்னெடுத்து வாக்குரிமையைப் பறிக்க நினைக்கிறார்கள்.

தமிழ்நாட்டிற்கு இவர்கள் வைத்திருக்கும் குறி பீகாரிலிருந்து தொடங்குகிறது. தமிழ்நாட்டின் வாக்காளர்களை நீக்கி விட்டு மற்ற மாநிலங்களிலிருந்து இங்கு குடியேறியவர்களை இங்கு வாக்காளர்களாகக் முனைக்கும் இந்த சிறப்புத் தீவிர திருத்தம் ஏற்கனவே தமிழர்களுக்கு அநீதி செய்யத் தொடங்கி விட்டது.

### பறிக்கப்பட்ட வாக்குரிமை

கடந்த ஜனவரி 6 அன்று 2025ம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதன்படி தமிழ்நாட்டிலிருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை 6 கோடியே 36 லட்சத்து 12 ஆயிரத்து 950. ஆனால் அதிலிருந்து சரியாக பத்து மாதம் கழித்து இன்று தமிழ்நாட்டின் வாக்காளர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்க வேண்டுமல்லவா? உண்மை அதுவல்ல. தமிழ்நாட்டில் இன்று வாக்காளர்களின் எண்ணிக்கை பூஜ்ஜியம்.

ஒட்டு மொத்த தமிழ்மக்களின் வாக்குரிமையையும் பறித்து விட்டு, நாங்கள் சொல்லும் ஆவணங்களைக் கொண்டு வந்து கொடுங்கள், உங்களுக்கு வாக்குரிமையைத் திருப்பித் தருகிறோம் என்ற திருட்டு ஆட்டத்தை தேர்தல் ஆணையம் மூலம் ஆடத் தயாராகியிருக்கிறது பா.ஜ.க. நீங்கள் இருக்கும் வீட்டிலிருந்து வெளியே போய் விடுங்கள். பிறகு இது உங்கள் வீடு என நான் கேட்பது போன்ற ஆவணத்தைக் கொடுங்கள் இல்லையென்றால் இந்த வீடு உங்களுக்கு சொந்தமில்லை என்பதே பா.ஜ.க. ஆடும் கள்ளாட்டத்தின் அடிப்படை. தமிழ்நாட்டை இவர்கள் வஞ்சிக்கப் போகிறார்கள் என்பதற்கு பல உதாரணங்களை சொல்ல முடியும்.

### எடுத்துக் கொண்ட காலமும் கணக்கும்

**இதற்கு முன்பு இந்தியாவில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் நடக்கவே இல்லையா என்றால் நடந்திருக்கிறது. கடைசியாக 2002 தொடங்கி 2004 வரை இரண்டு ஆண்டுகள் நடந்தது. அதனை வெறும் ஒரு மாதத்தில் நடத்துவதில் இருந்தே இந்த அநியாயத்தை அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிக்கப் போகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்தை முடித்த இரண்டு மாதங்களில் தேர்தல் அறிவிப்பு வந்து விடும்; ஐந்து மாதங்களின் வாக்குப்பதிவே முடிந்து விடும், பாஜகவின் இந்த அயோக்கியத்தனத்தின் பின்னணியை நாம் அங்கிருந்து தான் புரிந்து கொள்ள வேண்டும்.**

**தமிழ்நாட்டில் இதனை நடத்த இவர்கள் தேர்வு செய்தது பருவமழைக்காலத்தை; மக்களும் கட்சியினரும் பருவமழைக் கால உஷார் நிலையில் இருக்கும் போது தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்து விடுவதற்கு திட்டமிட்டிருக்கிறது பாஜக.**

இந்தப் பணியில் மொத்தம் 68,467 அதிகாரிகள் ஈடுபடப் போவதாக அறிவித்திருக்கிறது தேர்தல் ஆணையம். 2025ம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியலின் படி பார்த்தால் இந்த ஒரு மாதத்தில் ஒரு அதிகாரி சராசரியாக 930 வாக்காளர்களை சந்திக்க வேண்டும். அப்படியென்றால் ஒரு நாளைக்கு 30 வாக்காளர்கள். ஒரு மாதத்தில் இந்த பருவமழைக்காலத்தில் இது எந்தளவிற்கு சாத்தியம் என அறிவுள்ளவர்களுக்கு விளங்கும். இரவோடு இரவாக பண மதிப்பிழப்பை அறிவித்து, சாமானியர்களின் சிறுவாட்டுக் காசு முதற்கொண்டு திருடியவர்களின் அடுத்த கட்ட ஊழல் இது. படிக்காமல் தேர்வுக்கு போகும் மாணவன் பிட் அடித்துப் பாசாவது போன்ற முயற்சிதான் இந்த சிறப்புத் தீவிர திருத்தமும். மக்களிடம் வாக்கு வாங்கி நியாயமாக வெல்ல முடியாது என்று தெரிந்தவுடன் வாக்குத் திருட்டு, சிறப்பு திருத்தம் மூலம் வாக்காளர்களை நீக்குவது எனக் கிளம்பியிருக்கும் பாஜகவின் பிரதான நோக்கம் தேர்தலை இல்லாமல் செய்வது. தேர்தல் ஆணையத்தை சீர்குலைத்து தன் ஆட்டத்திற்கேற்ப அதனை வளைக்கத் தொடங்கியதில் இருந்தே பாஜகவின் இந்தத் திட்டம் தொடங்கி விட்டது.

### தேர்தல் ஆணையத்தை சீர்குலைத்த பா.ஜ.க.

மக்களுக்கு தேர்தல் மீதான நம்பிக்கை குலைந்ததற்கு தேர்தலை நடத்தும் ஆணையத்தை பா.ஜ.க. கட்டுப்படுத்தியதே முதல் காரணமாக அமைந்தது. தேர்தல் ஆணையர்களை தேர்வு செய்வதற்கான வழிமுறைகளை வழங்கிய உச்சநீதிமன்றம், பிரதமர், எதிர்கட்சித் தலைவர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அடங்கிய குழு மூலம் தேர்தல் ஆணையரை தேர்வு செய்யச் சொன்னது. தங்களுடைய திருட்டு வேலைக்கு அது சரி வராது என்பதால் நாடாளுமன்றத்தில் சட்டமியற்றி, அந்தக் குழுவில் இருந்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை நீக்கினார்கள். அவருக்குப் பதிலாக பிரதமர் நியமிக்கிற ஒன்றிய அமைச்சர் இடம்பெறுவார் என குழு திருத்தப்பட்டது. அது தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வருவதற்கு முன்பே மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் எதிர்ப்பு புறந்தள்ளப்பட்டு இரவோடு இரவாக தேர்தல் ஆணையரை நியமித்தார்கள்.

அப்படி அவர்களால் விதிகளுக்குப் புறம்பாக நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையர் இப்போது எல்லா விதிகளையும் புறம் தள்ளி பாஜகவின் தாளத்திற்கு ஆடிக் கொண்டிருக்கிறார் அதன் உச்சகட்டம் தான் இந்த சிறப்புத் தீவிர திருத்தம். பீகாரில் இத்தனை லட்சம் வாக்காளர்களை நீக்கியிருக்கிறீர்கள் அவர்களின் விவரங்களைக் கொடுங்கள் என உச்சநீதிமன்றம் கேட்ட போது அதனைத் தராமல் மறைத்தவர்கள். வாக்குத் திருட்டு தொடர்பான பிரச்னையில் வாக்கு சதவீதம் திடீரென அதிகரித்த வாக்குச்சாவடிகளின் சிசிடிவி பதிவுகளைக் கேட்ட போது, பெண்களின் கவுரவம் போய் விடும் என பழைய கால பொய் ஒன்றைச் சொல்லி மறுத்ததும் இந்த யோக்கிய தேர்தல் ஆணையம் தான். நாங்கள் யோக்கியர்கள்தான் தைரியமாக சொம்பை எடுத்து வெளியே வையுங்கள் என இப்போது சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள்.

### தேர்தலை அழிப்பதும் பா.ஜ.க.வின் ஒற்றையாட்சியும்

**இந்தியாவின் தேர்தல் முறை பா.ஜ.க.விற்கு அவர்களின் முன்னோர்களான சங்பரிவார்களுக்கு எப்போது உகந்த ஒன்று அல்ல. இந்தியா சுதந்திரமடைந்த போது வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற திட்டம் முன்னெடுக்கப்பட்டது மிகப்பெரிய புரட்சி. காலம் காலமாக ஏற்றத்தாழ்வுகளில் ஊறிப் போயிருந்த இந்திய சமூகத்தில் அந்த முயற்சி முக்கியமான ஒன்று. இந்தியாவின் முதல் தேர்தலில் கணவர் பெயரைச் சொல்ல மறுத்ததால் லட்சக்கணக்கான பெண்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க முடியாமல் போனது. அந்தளவிற்கான பிற்போக்கு சமூகத்தில்தான் பல முன்னேறிய நாடுகள் தயங்கிய வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை திட்டத்தை முன்னெடுத்தார் நேரு.**

**அது சங்பரிவார்களை மிகவும் அச்சப்படுத்தியது. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை திட்டத்தின் தோல்வியை தன்னுடைய வாழ்நாளில் நேரு பார்ப்பார் என எழுதியது ஆர்.எஸ்.எஸின் ஆர்கனைசர் பத்திரிகை. ஆனால் அந்தத் திட்டத்தின் வெற்றியைப் பார்த்தார் நேரு. நாற்பது கோடி மக்கள் தங்கள் தலைவிதியை தாங்களே தீர்மானிக்கும் தேர்தல் ஜனநாயகத்தை இந்தியர்களுக்காக விட்டுச் செல்கிறேன் என்று சொன்னார்.**

**1925ல் தொடங்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ்ஸின் இந்து ராஷ்ட்ரா கனவிற்கு மிகப்பெரிய அடியைக் கொடுத்தது நேருவின் கனவு. தங்களுடைய தோல்விக்கெல்லாம் நேருவைக் காரணம் காட்டியவர்கள் இப்போது நேருவின் கனவை அழித்து தங்கள் கனவை நனவாக்கத் துடிக்கிறார்கள்.**

**இந்திய தேர்தல் முறையை சங்கபரிவார்கள் அழிக்க நினைப்பதற்கு அதில் இருக்கும் சமத்துவத் தன்மையே காரணம். இந்தியாவின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவருக்கும் ஒரு ஓட்டுதான்; எந்த அதிகாரத்தையும் சுவைக்காத சாமானியனுக்கும் ஒரு ஓட்டுதான். அவர்களுடைய மொழியில் இன்னும் சரியாக 'அவா பாஷையில்' சொன்னால் பிரம்மதேவன் தலையில் பிறந்த பிள்ளைகளுக்கும் ஒரு ஓட்டுதான் அதற்கு கீழ் எங்கு பிறந்த பிள்ளைகளுக்கும் ஒரே ஓட்டுதான். இந்த சமத்துவத்தை எப்படி சனாதனிகளால் பொறுத்துக் கொள்ள முடியும். அவர்கள் உருவாக்கி வைத்துக் காப்பாற்றத் துடிக்கும் ஏற்றத் தாழ்வுகளுடன் கூடிய சமூகத்திற்கு எதிராக இருக்கும் வாக்குரிமையை மக்களிடம் இருந்து பறிக்கத்தான் தங்கள் இயக்கத்தின் நூற்றாண்டில் இந்த ஆயுதத்தை கையில் எடுத்திருக்கிறார்கள்.**

**அவர்கள் எடுக்கும் எந்த ஆயுதமும் தமிழ்நாட்டில் எடுபடாது, அதனை முறியடிக்க தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் என்ற கேடயம் இருக்கிறது. அந்தக் கேடயத்தைக் இப்போது கையில் வைத்திருப்பவர் எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். சட்டப்போராட்டம் நடத்தி இந்த சூழ்ச்சியை எங்கள் தலைவர் முறியடிப்பார்.**

ஆளுநர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு தொந்தரவு கொடுத்த போது மாநில அரசுகளுக்கு அரணாக அமைந்த தீர்ப்பை நீதிமன்றத்தை நாடி கழக அரசால்தான் ஆணை பெறப்பட்டது. ஆளுநர்களுக்கு காலக் கெடு விதித்து தீர்ப்பளித்து தீர்ப்பின் நகலை அனைத்து மாநில ஆளுநர்களுக்கும், உயர்நீதிமன்றங்களின் பதிவாளர்களுக்கும் அனுப்பச் சொன்னது உச்சநீதிமன்றம். ஆளுநர்கள் மூலம் மாநில சுயாட்சிக்கு தரப்பட்ட சிக்கலுக்கு முடிவு கட்டிய திராவிட முன்னேற்றக் கழகம், மக்களின் அடிப்படை உரிமையான வாக்கைப் பறிக்க நினைக்கும் SIR என்ற சதியை முறியடித்து இந்தியாவைக் காக்கும்.

கட்டை விரலைக் கேட்டவர்களின் வாரிசுகள் இப்போது ஆள்காட்டி விரலின் அதிகாரத்தைப் பறிக்கை நினைக்கிறார்கள். வழக்கம் போல இனத்துரோக வீபிஷணர்கள் அவர்களுக்கு துணை போகத் தொடங்கியிருக்கிறார்கள். அன்று சொன்ன பதில்தான் இன்றும்; கட்டை விரலோ, தலையோ இந்நாளில் எவனும் கேட்டால் பட்டை உறியும்; சுடுகாட்டில் அவன் கட்டை வேகும்.